DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.09/2024**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 02-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | ஆசிரியை |
| பெயர் | - | தேவி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | முத்துக்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | வாட்டர்பால்ஸ் எஸ்டேட் | வயது | - | 43/2026 |
| சாதி | - | | | | |

**26-02-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வாட்டர்பால்ஸ் அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பபிதா என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 20.03.2024-ம் தேதி சுமார் காலை 10.00 மணியளவில் நான் பள்ளியில் 10-ம் வகுப்பிற்கு பாடம் நடத்திக்கொண்டிருந்தேன். திடீரென்று தலைமை ஆசிரியர் அறை அருகே பலத்த சத்தம் கேட்டது. நானும், அறிவியல் ஆசிரியர் ரவிக்குமார், தமிழ் ஆசிரியை சங்கீதா ஆகியோர் அங்கு சென்று பார்த்தோம். தற்போது, பபிதா மற்றும் அவரது அம்மா ஆகியோர் அங்கிருந்தார்கள். அவர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். என்ன சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்று தெரியாது. சிறது நேரம் கழித்து 2 போலீசார் வந்தார்கள். தலைமை ஆசிரியரை அழைத்து சென்றார்கள். எதற்காக அழைத்து சென்றார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 20.03.2024-ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், ஆசிரியை சங்கீதா பள்ளி வகுப்பு முடித்துவிட்டு பாத்ரூமிற்கு செல்வதற்காக தலைமை ஆசிரியர் அறை அருகே வந்த போது, எங்கள் பள்ளியில் குழந்தைகளை வீட்டில் இருந்து அழைத்துக்கொண்டு பள்ளிக்கு அழைத்து வரும் எஸ்கார்டுகாக தற்காலிக வேலை செய்யும் பபிதா என்பவர் பதற்றத்துடன் அழுது கொண்டு தலைமை ஆசிரியர் அறையில் இருந்து வெளியில் வேகமாக வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவரிடம் நாங்கள் என்ன என்று விசாரித்த போது, தலைமை ஆசிரியர் குணசேகரன் எனது கணவரும், நானும் பிரிந்து வாழ்வதை தெரிந்து கொண்டு கடந்த 2 மாதமாக தன்னிடம் தவறான

நோக்குடன் அவர் தன்னுடன் குடும்ப நடந்த வா உன்னையும், உ னது குழந்தைகளையும் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. பின்பு, 20.03.2024-ம் தேதி காலை 09.00 மணிக்கு பள்ளிக் குழந்தைகளை அழைத்து கொண்டு வந்தபோது, ஏன் லேட்டாக அழைத்து வந்தாய் என திட்டியதாகவும், 11.00 மணியளவில் தான் தலைமையாசிரியர் அறையில் இருந்த ஜெராக்ஸ் மிசினில் ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டிருந்த போது, தலைமையாசிரியர் தனக்கு பின்னால் வந்து என்னிடம் தவறாக நடக்க முயற்சி செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பபிதா தலைமையாசிரியரை தள்ளிவிட்டு ஓடி வந்ததாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பபிதாவுக்கு ஆறுதல் கூறி அங்கிருந்த பெஞ்ச்சில் உட்கார வைத்தோம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் பபிதா அவர்கள் அம்மா , மல்லிகாவிற்கு போன் செய்து தகவல் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மல்லிகா பள்ளிக்கு வந்ததும் மேற்படி சம்பவம் குறித்து, புகார் கொடுப்பதற்காக காடம்பாறை காவல் நிலையம் சென்றதாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி தான் பணிபுரியும் பள்ளியில் தலைமையாசிரியர் என்பதால் அவருக்கு பயந்து அவருக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.